தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 26

2012 மே 8, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

அனைத்து மொழி எழுத்துகளும் 'அ' என்னும் எழுத்தினை முதலாகக் கொண்டு தொடங்குகின்றன. அதேபோல, இந்த உலகமும் ஆதி பகவன் என்னும் கடவுளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

224—

கிராம நிருவாக அலுவலர்கள்

***5980—டாக்டர் வைகைச்செல்வன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம நிருவாக அலுவலர்களும், கிராம உதவியாளர்களும், அவர்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே தங்கியிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2012 மே 8

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து கிராம நிருவாக அலுவலர்களும், அவர்களது பொறுப்பு கிராமத்திலேயே தங்கியிருந்துப் பணிபுரிய வேண்டும் என்று வருவாய் நிருவாக ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நீதிமன்ற உத்தரவின்படி அனைத்து கிராம நிருவாக அலுவலர்களும், அவர்களது பொறுப்பு கிராமத்திலேயே தங்கிப் பணிபுரிய வேண்டும் என்றும், இதனை உயர் அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காணுகின்ற சகோதரனிடத்தில் அன்பு காட்டாதவன், காணாத தேவனிடத்தில் எவ்வாறு அன்புகூர்வான்? என்று விவிலியம் பேசும். அத்தகையவிதத்தில் அன்பையும், மாண்பையும், கனிவையும் மக்களிடத்திலே தெரியப்படுத்திக்கொண்டிருக்கிற வள்ளல் பெருமாட்டி, தென்புலத்திலேயிருந்து நாளை வடபுலத்துக்குச் சென்று டெல்லிப் பட்டணத்தில், சாணக்கியபுரியில் சரித்திரம் படைக்க இருக்கும் தமிழக முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்பமை பொருந்திய வருவாய்த் துறை அமைச்சருடைய பதிலுக்கு நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, கிராம நிருவாக அலுவலர்களும், கிராம உதவியாளர்களும் சம்பந்தப்பட்ட கிராமத்திலேயே தங்கிப் பணிபுரிய வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்திருக்கிற அரசாங்கத்திற்கு நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலர்கள் 25, 27 ஆண்டுக் காலமாக ஒரே துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுடைய பணிக் காலம், அனுபவத்தை முன்னிட்டு

2012 மே 8]

அவர்களுக்கும் இந்தத் துறையிலே பதவி உயர்வு வழங்குவதற்கு திட்டமிடுதல் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக கிராம நிருவாக அலுவலர்கள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களையும் வருவாய்த் துறையில் Junior Assistants-களாகப் பணிபுரிவதற்கு வாய்ப்புகள் அளிக்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

புனல் மின் திட்டம்

***5340—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் 4x125 மெகா வாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூரில் 4x125 மெகா வாட் திறன் கொண்ட நீரேற்றுப் புனல் மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.